உ

கடவுள் துணை.

# தடிக்கழுதை

பாட்டும் ஆண்பிள்ளை வீண்பிள்ளை

சிந்தும் அடங்கி இருக்கின்றன.

இ-முனிசாமிமுதலியாராலியற்றப்பட்டு



சென்னை-பாளைச

பதிவிரதை. தடிக்கழுதை.

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

உ

நீதிச்சிந்துவென்னும்

# பெண்புத்திமாலை.

அன்னைத்தந்தைகளை தெய்வமென்றேதினம்
அன்பாயுபசரிப்பாள்—பதிவிரதை
இன்னிலத்தினில்கெட்ட துரோகியெனும்பேரை
ஏற்றுக்கொள்வாள்மூட—தடிக்கழுதை (௧)

சொந்தக்கணவனொரு அந்தகனானாலும்
வந்தனைசெய்திடுவாள்—பதிவிரதை-இல்லாமல்
சிந்தையில்வெவ்வேறு எண்ணத்தால்கணவனை
சிரித்திரிபவள்கெட்ட—தடிக்கழுதை (௨)

தனதுகணவன்மூட தடியனாயிருந்தாலும்
தன்மையுடனிருப்பாள்—பதிவிரதை-இல்லாமல்
மனதுக்கிசைந்தநல்ல மன்னனாயிருந்தாலும்
மதியாமல்பேசிடுவாள்—தடிக்கழுதை (௩)

மாமியாரடித்தாலும் நாம்செய்தகுற்றமென்று
மவுனமாயிருப்பாள்—பதிவிரதை-இல்லாமல்
சாமியாரைப்போல யாரையுமதியாமல்
சண்டைக்கிழுப்பவளே—தடிக்கழுதை (௪)

கணவன்சம்பாதனையைக் கண்டுசம்சாரத்தில்
கருத்தாயிருப்பவளே—பதிவிரதை-இல்லாமல்

கணவனைமதியாமல் கண்டபடியழித்து
கடன்காரனாக்குவாள்—தடிக்கழுதை (௫)
தண்ணிக்குப்போனாலும் தன்னடிபிசகாமல்
தலைகுனிந்துபோவாள்—பதிவிரதை இல்லாமல்
என்னத்தொழிலாக தெரிவில்வந்தாலும்சண்டை
என்னதென்றோடுவாள்—தடிக்கழுதை (௬)
அன்னியபுருஷர்மெத்த அழகாயிருந்தாலும்
ஆசைவையாள்நல்ல—பதிவிரதை-இல்லாமல்
என்னசாதியாயிருந்தாலும் புருஷர்மேல்
இச்சைக்கொண்டுத்திரிவாள்—தடிக்கழுதை (௭)
கொண்டையில்மலர்சூடி தேருவேகலுணனதென்று
கூச்சத்துடனிருப்பாள்—பதிவிரதை-இல்லாமல்
செண்டுப்பூவானாலும் கொண்டையில்முடித்துத்
தண்டித்தனங்கள்செய்வாள்—தடிக்கழுதை
கொண்டகணவன்மாமி மாமனாரடித்தாலும்
குறுக்கப்பேசாதிருப்பாள்—பதிவிரதை- இல்லாமல்
லண்டத்தனமிகச் சண்டைக்கிழுத்தவர்கள்
மானங்கெடுத்திடுவாள்—தடிக்கழுதை (௮)
காலையிலெழுந்து கணவனடிபணிந்து அவன்
கருத்தைப்போலேநடப்பாள்-பதிவிரதைஇல்லாமல்
வேலைக்கிசோம்பலாய் பாயில்படுத்தபடி
வீண்பொழுதைக்கழிப்பாள்—தடிக்கழுதை (௯)
அங்கம்பசித்தொருவர் அய்யமென்றுவந்தால்
அன்பாயுபசரிப்பாள்—பதிவிரதை-இல்லாமல்

தங்கவொட்டாமலே சிரித்தெருவில்வெட்டித்
தள்ளப்போவான்மூட—தடிக்கழுதை (௰௧)
அண்டைவீடெதிர்வீடு அருமுகமானாலும்
அகத்தைவிட்டுப்பிரியாள்—பதிவிரதை-இல்லாமல்
வண்டசிநேகஞ்செய்து கண்டவிடந்திரிந்து
சண்டையிழுத்திடுவாள்—தடிகழுதை (௰௨)
கட்டினதாலி கயரோடிருந்தாலும்
கணவனைவெருக்காள்—பதிவிரதை
மட்டித்தடியனென்னை கட்டினநாள்முதல்
மரம்போலிருந்தேனென்பாள்—தடிக்கழுதை (௰௩)
வாசற்படிகடந்தால் வருங்குற்றம்நமக்கென்று
வண்மையாயுள்ளிருப்பாள்—பதிவிரதைஇல்லாமல்
பேசஅயல்வீடு யெங்குங்கலகத்தை
பெருகச்செய்துவருவாள்—தடிக்கழுதை (௰௪)
குடும்பங்கலையாமலே கூட்டமாயெல்லோரும்
கூடிசிரிக்கச்செய்திடுவாள்—பதிவிரதை-இல்லாமல்
நடுங்கயெல்லோரையும் பேசிகுடும்பத்தை
நாலாய்க்கலைத்திடுவாள்—தடிக்கழுதை (௰௫)
அழகிலாக்கணவனு யிருந்தாலும் அவனன்றி
யன்னியரைநாடாள்—பதிவிரதை-இல்லாமல்
வொழுங்காவொருவன்வரக் கண்டாலவனை
ஒருமித்துசேர்ந்திடுவாள்—தடிக்கழுதை (௬)
கதிரவனுதிக்காமுன் காலைக்கடன்முடித்து
கணவனெதிர்வருவாள்—பதிவிரதை-இல்லாமல்

பிரதிதினமுங்கணவன் பிதட்டினாலும்பெருந்
திண்டுபோல்தூங்குவாள் — தடிக்கழுதை (௰எ)
அரஞ்செய்விரும்பென அவ்வையுரைத்தமொழி
அணுகளவும்பிசகாள் — பதிவிரதை-இல்லாமல்
தரும்பிச்சையைக்கூடத் தடுத்துவேண்டாமென்று
தானுங்கொடுக்கவெண்ணாள் — தடிக்கழுதை (௰அ)
உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகென்ப
துண்மையெனநடப்பாள் — பதிவிரதை-இல்லாமல்
கண்டபாட்டுகள் ஆட்டங்கள்பார்க்கவும்
கைவிரித்துத்திரிவாள் — தடிக்கழுதை (௰கூ)
ஊருடன்பகைக்கின் வேருடன்கெடுமென்ற
உண்மையையறிந்துக்கொள்வாள் — பதிவிரதை இல்லாமல்
ஆராகிலுஞ்சரி வாங்கள்வெளியேயென்று
அதட்டித்திரிந்திடுவாள் — தடிக்கழுதை (உ௰)
சக்காளத்திபெற்ற பிள்ளையாயிருந்தாலும்
சமமாய்ப்பார்த்திருப்பாள் — பதிவிரதை-இல்லாமல்
மிக்கழுழுக்கமுள்ள சேயனாயிருந்தாலும்
மெலியமிரட்டிடுவாள் — தடிக்கழுதை (உக)
யிரப்பவர்க்குபிச்சை யிடவேணுமென்பதை
எண்ணிநடத்திடுவாள் — பதிவிரதை-இல்லாமல்
வலைக்கண்டவுடனிங்கு வைத்திருக்குதோவென்று
வீண்டுசெய்தோட்டுவாள் — தடிகழுதை (உஉ)
அங்கங்களிருந்தாலும் அணிந்துவெளியில்வந்தா
அப்பாதையில்நடக்காள் — பதிவிரதை-இல்லாமல்

துணியாகிலும்ஒழுங்கா யலங்கரித்துக்கொண்டு
சொகுசாய்த்திரிந்திடுவாள்—தடிக்கழுதை (உரு)
இன்னிலநடத்தையை சொன்னேன்முனிசாமி
இதைத்தெரிந்துக்கொள்வாள்—பதிவிரதை-இல்லா
என்னபாட்டுஇதை அச்சிலிட்டாரென்று [மல்
என்னைப்பழிப்பவளே—தடிக்கழுதை. (உசு)

பெண்புத்திமாலை-முற்றிற்று,

---

# ஆண்பிள்ளை வீண்பிள்ளைசிந்து.

## காப்பு வெண்பா.

சீராருலகினர்தந் தீயநெறிமாற்றிப்
பேரார்நன்னெறிவிளங்கப் பேசுதற்கிங்—சேராரும்
மும்மலமும்முச்சுடரும் முப்பாலுக்கப்பாலுஞ்
செம்மலிணைத்தாளிணையே சேர்.

## கண்ணிகள்.

சீர்மல்கியசராசரமாயொழிற்
சிவமதைச்சேர்ந்தவ ளாண்பிள்ளை
உயர்தவமதிற்சார்ந்தவ ளாண்பிள்ளை
பார்வருஉடலமாய் மனமதுகொண்டு
பாவத்தினிலுழன்றவன் வீண்பிள்ளை
சத்துச்சித்தானந்தமாகியபரவெளி
தன்னையறிந்தவ ளாண்பிள்ளை
மெய்யிற் றன்னையறிந்தவ ளாண்பிள்ளை

முத்திமுதல்வனை பணியாமல்நாடோறும்
மூடமாய்த்திரிந்தவன் வீண்பிள்ளை
மும்மலமுங்கடந்த மூர்த்தியினருள்பெற
முனைந்துதிரிந்தவ னாண்பிள்ளை
மனங்கனிந்துபரிந்தவ னாண்பிள்ளை
இம்மகிதலவாழ்வை சதமெனவெண்ணியே
யேங்கியலைந்தவன் வீண்பிள்ளை
நாலிரண்டுக்குமெட்டா நாதன்திருவடியை
நாலைத்துணிந்தவ னாண்பிள்ளை
வினைவாடப்பயந்தவ னாண்பிள்ளை
பாலினிமின்சொலாய் பாவையர்களாகிப்
பரிவுகொண்டலைந்தவன் வீண்பிள்ளை
ஆதிமூலமேயென்று ஓதுங்கஜேந்திரனுக்
கருளியதையறிந்தோ னாண்பிள்ளை
மறுத்திருளறமேபுரிந்தோ னாண்பிள்ளை
பாதகனாய்புவியில் வீணர்கடமைக்கூடி
பாதர்களைப்பழித்தோன் வீண்பிள்ளை
ஆதியனாதிசோதியாய்நின்றிலங்கும்
அய்யனையறிந்தவ னாண்பிள்ளை
ஒளிர்மெய்யனையறிந்தவ னாண்பிள்ளை
ஓதியுணராமல் மாதரைக்கூடி
யுறக்கத்திலலைந்தவன் வீண்பிள்ளை
பஞ்சரக்கூட்டினி லிருந்துநடனமிடும்
பரமனையறிந்தவ னாண்பிள்ளை
தன்திறமையால்தெரிந்தவ னாண்பிள்ளை

வஞ்சனை செய்மடமாதர்கள் மயக்கத்தில்
வாடிவிழிப்பவனே வீண்பிள்ளை
சந்த்ரசடாசுந்தர சங்கரனேயென்று
சாற்றித்திரிந்தவ ஆண்பிள்ளை
நிதம்போற்றித்திரிந்தவ ஆண்பிள்ளை
சுந்தரஞ்சேர்மட மாதர்கள்மையலால்
சோர்வுற்றலைந்தவன் வீண்பிள்ளை
மெய்யடியார்களைக் கண்டேயடியணிந்து
மேவிநடப்பவ ஆண்பிள்ளை
மலர்தூவிவிடுப்பவ ஆண்பிள்ளை
வையகந்தினில்வீணரைக்கூடி
மதிகெட்டலைபவன் வீணபிள்ளை
சத்திரஞ்சாவடிசாலைகள்சோலைகள்
தானமைத்திட்டவ ஆண்பிள்ளை
கொடுங்கான்திரிந்திட்டவ ஆண்பிள்ளை
சித்திரவிலைமாதர்கள் மெச்சிடமேடைகள்
செம்பொன்னளித்தவன் வீண்பிள்ளை
தேவாலயங்களுந் திகழ்மாடங்களுங்கட்ட
தேசங்கள்திரிந்தவ ஆண்பிள்ளை
நல்லோர்கள்வாசங்கள்புரிந்தவ ஆண்பிள்ளை
பாவாணர்களுக்குப் பத்தர்க்குமாசைசொல்லி
பலகால்திரியச்செய்தோன் வீண்பிள்ளை

ஆண்பிள்ளைவீண்பிள்ளைசிந்து-முற்றிற்று.